செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி மீ 28௳, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அட] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ௵ வைகாசி மீ ௨௧௳ வெள்ளிக்கிழமை (4-6-1971) [இல-அ

## தேவாரபாராயணம்
## திருவடி ஞானத்தை நல்கும்

[10-6-71 இல் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூசை]

[ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை, ஏழாலை, சுன்னாகம்.]

(முன்வளர்ச்சி—2)

கூன்பாண்டியனாகிய நின்றசீர் நெடுமாறநாயனாரின் வெப்பு நோயைத்தீர்த்து வைத்த வலிமை "மந்திரமாவது நீறு ………" என்ற திருப்பதிகத்திற்கு உண்டு. நோய் அணுகாமல் எம்பெருமானை வேண்டித் தினமும் நாம் அதனை ஓதல் வேண்டும். சிவ, சிவ, என்று செப்பி விபூதியை நம்பிக்கையோடும் நாம் அணிதல்வேண்டும்.

"அவ்வினைக்கிவ்வினை …" என்ற தொடக்கத்தையுடைய திருப்பதிகப் பாராயணமும் உடற்பிணியை நீக்கும்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தகப்பனார் யாகம் செய்வதற்குப் பொருளில்லையென்று தமது தவக்குழந்தைக்கு கூறினார். சம்பந்தசுவாமிகள் திருவாவடுதுறையில் எழுந்தளியிருக்கும் எல்லாம்வல்ல சிவபெருமான் திருவடியைத் தியானித்தார்

"தந்தையார் மொழி கேட்டதும்
புகலியார் தலைவர்
முந்தை நாளிலே மொழிந்தமை
நினைந்தருண் முன்னி
யந்தமில் பொருளாவன
வாவடுதுறையு
ளெந்தையாரடித்தலங்களென்றே
வென எழுந்தார்"

என்று தெய்வச் சேக்கிழார் சுவாமி கூறுகிறார். எல்லாம் வல்ல சிவபெருமானின் தாமரைத் திருவடிகளே பெரும் செல்வமென வேதாகமங்களில் கூறப்பட்ட உண்மையையுணர்ந்த சம்பந்தப்பெருமான் எமபெருமானைத் துதித்து,

"இடரினுந் தளரினும்
எனதுறு நோய்
தொடரினும் உனகழல்
தொழு தெழுவேன்
……… இதுவோ எமையாளுமா
றீவதொன் றில்லையேல —
அதுவோ உனதின்னருள்
ஆவடுதுறை அரனே"

என்று பாடினார். திருப்பதிகம் பாடியபின் ஒரு சிவபூதம் கோயிற் திருப்படியில் ஒரு பொன் உலவாக்கிழியை வைத்து மறைந்தது. அதனைப் பிள்ளையார் எடுத்துத் தந்தையாரிடம் யாகம் செய்யுமாறு கொடுத்தார்.

திருஞான சம்பந்தசுவாமிகள் தேவாரத்தில் "செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" என்று கூறிய பதிகத்தையும் "இடரினும் தளரினும் ……. என்றபதிகத்தையும் தினமும் பாராயணம் செய்வோர் வறுமை நீங்கிச் செழிப்புற்று வாழ்வர். மந்திரங்களுக்கெல்லாம் மேலானது பஞ்சாட்சரம். இதன் பெருமையை சம்பந்தமூர்த்தி சுவாமிகள் இரு தேவாரப் பதிகங்களில் விரித்துக்கூறியுள்ளார். பிறவிப்பெருங்கடலைநீந்தி அருட்கரைசேர்க்கும்தெப்பமாக உள்ளது ஐந்தெழுத்து.

"துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்…." என்ற தேவாரப் பதிக மூலமாகவும், "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற பதிகம் மூலமாகவும் ஐந்தெழுத்தின் சிறப்பைப் பிள்ளையார் கூறியுள்ளார். ஐந்தெழுத்து ஓதல் இம்மை மறுமைப் பயன்களைத் தப்பாது கொடுக்கும்.

பாலறுவாயராகிய ஆளுடைய பிள்ளையாரைத் திருக்குமாரராகப்பெறும் பாக்கியம் பெற்ற சிவபாத இருதயர் தமது பூசைக் காலத்து நாடோறும் பிள்ளையார்பாடியருளிய திருப்பதிகங்களை ஓதும் நியமுடையவர் என்றும, இது அவருக்கு நாடோறும் செய்தல் அரிதென்றதை உணர்ந்த பிள்ளையார் தாம் திருவாய் மலர்ந்தருளிய எல்லாப் பதிகங்களையும் ஓதிய பேற்றை அளிக்கவல்ல ஒரு பதிகத்தைத் திருவாய் மலர்ந்தருளினார் என்றும் அப்பதிகமே "திருவெழுகூற்றிருக்கை"என்றழைக்கப்படுகின்றது. மற்றப் பதிகங்களைத் ஓத நேரமும வசதியும் இல்லாவிட்டால் 47 அடிகளைத் கொண்ட இப்பதிகத்தை மனனம் பண்ணி ஓதிவரலாம.

தற்காலத்தில் தமிழர்களாகிய நாம் பலவித துன்பங்களுக்கு ஆளாகியுள்ளோம. மொழியுரிமை இன்மை, வேலையில்லாத திண்டாட்டம் ஒற்றுமையீனம், மனக்கலக்கம் முதலியவற்றால் இடர்ப்படுகிறோம. இவற்றிற்கு சிறந்த மாற்று மருந்து பயபக்தியோடு மேற்குறித்த தேவாரங்களை ஓதுதல், பெற்றோர்கள் இல்லங்கள் தோறும் தினமும் இவற்றைப் பயின்றுவரவேண்டும். பிள்ளைகளும பயில்வார்கள். இதனால் அவர்களின் எதிர்கால வாழ்வு செழிப்படையும்.

"வாழ்க அந்தணர்
வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்
வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம்
அரன் நாமமே
சூழ்க வையகமுந்
துயர் தீர்கவே"

உ
திருச்சிற்றம்பலம்

கனைத்தெழுந்த வெண்டிரை
சூழ் கடலிடை நஞ்சு
தன்னைத்
தினைத்தனை யாமிடற்றில்
வைத்த திருந்திய
தேவ நின்னை
மனத்தகத்தோர் பாடல்
ஆடல் பேணி யிராப்
பகலும்
நினைத் தெழுவார்
இடர் களையாய்
நெடுங்கள மேயவனே

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தசுவாமிகள்.

## சித்திரத் தேர்

ஏழாலை அம்பலவாணேஸ்வரர் கோயில் சித்திரத் தேர் திருவருளால் பூர்த்தியாகியுள்ளது அதன் வெள்ளோட்ட விழா 4-6-71 (இன்று) நிகழவிருக்கிறது. கிரியைகள் காலை 8 மணிககு ஆரம்பமாகி பிற்பகல் 1 மணிக்குப் பூர்த்தியாகும். ஆசாரியரின் விசேடபூசை, ஆசாரிய சம்பாவனை, அம்பலவாணேஸ்வரர் விசேட பூசை. தேவாரப் பண்ணிசை, தேர்ப்பிரதிஷ்டை தேருக்கு தக்ஷிணையிட்டு அஞ்சலி செய்தல், வெள்ளோட்டப்பிரகடனம், சித்திரத்தேர் வீதிவலம் முதலியன முக்கிய நிகழ்ச்சிகளாகும். மேளக்கச்சேரி கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெறும்.

### மதுரை – சோழவந்தான் ஸ்ரீ ஜெனகை மாரியம்பாள் கோயில் திருவிழா
## தம்பிரானவர்கள் கதாப்பிரசங்கம்

மதுரை மாவட்டம் - நிலக்கோட்டை வட்டம் சோழவந்தான் ஸ்ரீஜெனகை மாரியம்மன்கோயில் வைகாசிப் பெருந் திருவிழா சென்ற 31-5-71 திங்கட்கிழமை ஆரம்பமாகி சிறப்புற நடைபெற்றுவருகிறது. ஷ கோவில் 4-ம் 5-ம் நாள திருவிழாக்களில் (முறையே 4, 5-6-71 வியாழன், வெள்ளி இருதினங்களும்) யாழ்ப்பாணம் நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத தம்பிரான்சுவாமிகள் இன்னிசைக கதாப்பிரசங்கம் நிகழ்த்துதற்கு அழைககப் பெற்றுள்ளனர். எதிர்வரும் 14, 15-6-71 இரு தினங்களிலும் தேர் தீர்த்தத திருவிழாககள நிகழவிருக்கின்றன தீர்த்தத்திருவிழா வைகையாற்றில நிகழும.

உ

## அளவையூர், ஸ்ரீ கும்பழாவளை விநாயகர் தோத்திரம்

[7-6-71 திங்கள் தேர் விழா நடைபெறுகிறது.]

மூவரரு மலர்கொண்டு சேவடி யிறைஞ்சுமுமர்
மூர்த்தியே போற்றி, நாக
முகமுடைய மாருதப் புரவல்லி தாபித்த
மூலகண நாத! போற்றி
ஓவரிய ஓங்கார காவலா போற்றி, மா
துளங்கனி உளங்குளிரவே
உற்றவல மாவந்து பெற்றகளி றேபோற்றி
உண்மையறி வானந்த பூங்
காவுதவி யடியார்க்குக் கண்ணருள் புரிந்தென்றும்
கையணைக்கும் தெய்வமே
கனகமுடி மிளிரஜங் கரமிளிர செவிமிளிர
கடவுதரம் மார்பு மிளிர,
மேவுமுல கிருளாகு வினையகல நின்பாத
மெய்யொளி விளங்கி மலர
விரவுமணித் தேரேறி வருகும்ப ழாவளை
விநாயகா போற்றி போற்றி.

— அளவையூர், "அருட்கவி" சீ. வி.

சைவபோத பிள்ளைப்பாட்டு: - 1

## தேவாரம் பாடிய செல்வக் குழந்தை

10-6-71 இல் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை:

[அறிஞர், திரு. மா. பீதாம்பரன் அவர்கள், திருமலை]

| | | | | |
|---|---|---|---|---|
| சீகா | ழித்துரை | சரணம் | சரணம் | |
| சிவபாத | இருதயர் | பிள்ளையாய் | சரணம்; | 1 |
| பகவதி | யார்பெறு | பாலா | சரணம் | |
| பார்வதி | தருபால் | பருகினை | சரணம்; | 2 |
| மூன்றாம் | வயசினில் | முத்தமிழ் | பெற்றாய் | |
| ஈன்றார் | இன்புற | இசைத்திடல் | உற்றாய்; | 3 |
| உமையருள் | பாலினை | உவப்புடன் | குடித்தாய் | |
| உண்மை | ஞானத்தை | உணர்ந்தருள் | கொடுத்தாய்; | 4 |
| சிவனருள் | ஞானத் | திருவருள் | பெற்றாய் | |
| தேவா | ரம்பல | திருவாய் | மலர்ந்தாய்; | 5 |
| பிள்ளையார் | ஆம்உனைச் | சிவன்ஆட் | கொண்டார் | |
| ஆளுடைய | பிள்ளை | யார்ப்பெயர் | பூண்டாய்; | 6 |
| புண்ணியக் | கன்றே | புகலியார் | தவமே, | |
| பண்ணொடு | பரனருள் | பாடினை | சரணம்; | 7 |
| ஆண்பனை | பெண்பனை | ஆக்கினை | சரணம் | |
| அரனருள் | தாளம் | பெற்றனை | சரணம்; | 8 |
| திருநீ | றிட்டுச் | சிவன்அரு | ளாலே | |
| அரசர்க் | குச்சுரம் | அகற்றினை | சரணம்; | 9 |
| முருகா | முருகா | முருகா | என்றே | |
| அருண | கிரியார் | அருளினர் | சரணம்; | 10 |
| நாவுக் | கரசர் | நண்பா | சரணம் | |
| நான்மறை | அருளிய | நாதா | சரணம்; | 11 |
| நாவுக் | கரசரை | 'அப்பர்' | என்றாய் | |
| நால்வருள் | இளைய | நாயக | சரணம் | 12 |
| திருக்கோண | மாமலை | திருக்கே | தீச்சரத் | |
| தேவா | ரங்கள் | திருவாய் | மலர்ந்தாய்; | 13 |
| சைவத் | திருநெறி | தழைத்திட | வந்தாய் | |
| உய்வைத் | தந்தாய் | உரவோய் | சரணம் | 14 |
| புண்ணியக் | கன்றே | புகலியர் | கோவே | |
| புந்தியில் | வந்தருள் | புரிவாய் | போற்றி. | 15 |

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஞூ வைகாசிமீ உக-உ வெள்ளிக்கிழமை [1971]

## தலையங்கம்

கொழும்புத் தகுதிவாய்ந்த அதிகாரியின் அநுமதிபெற்ற பின்பே ஆசிரியத் தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் எங்கள் பத்திரிகை அதிகாரியின் அங்கீகாரத்தை உரிய நேரத்தில் பெறுவது இயலாமையாலும் சில தினங்களுக்கு ஆசிரியத் தலையங்கங்கள் வெளிவரமாட்டா வென்பதை வாசக நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்

# தேவாரப் பண்ணிசை வகுப்பு

1-6-71 செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் தேவார இன்னிசைச் செல்வர் தேவாரமணி திரு P. A. S. இராசசேகரன் அவர்கள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறாக தேவார பண்ணிசை வகுப்புக்களை நாவலர் மணிமண்டபத்தில் வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு தி. முருகேசம்பிள்ளை அவர்கள் தலைமையில் ஆரம்பித்தனர். தலைவா அவர்கள் வகுப்புகள் ஆரம்பிக்க முன் பேசியதாவது: "நாவலர் பெருமான் இம்மணி மண்டபம் நிறுவப்பெற்றிருக்கும் நிலத்தினை இற்றைக்கு நூற்றிருபத்தைந்து வருடங்களுக்கு முன் பிரமஸ்ரீ. கார்த்திகேய ஐயரிடம் சைவசமய விருத்திக்குரிய தொண்டுகளைப் புரிய விலைக்குப் பெற்றனர். இந்நிலத்தில் ஒரு மடாலயமமைத்து அதில் வேதாகமக் கல்வி பயிற்சியளிக்கும் வகுப்பு, தேவார வகுப்பு, புராண படனம, ஆறுபத்துமூவர் குருபூசை, மாகேவர பூசை முதலிய சற்கருமங்கள் நிகழவேண்டுமென்பதே நாவலர் பெருமானுடைய குறிககோளாகும். நாவலர் பெருமான் காலத்திலோ அல்லது பினபோ அவருடைய குறிக்கோள் நிகழவில்லை. திருவருளினல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை ஆரம்பிககப் பெற்று இந்நிலத்தினை அரசாங்கத்திடம் பெற்று இம் மணி மண்டபத்தினை அமைத்து அதில் நாவலர் பெருமான் சிலையையும் நிறுவி சபையார் சைவப் பணிகளைப் புரிந்துவருகின்றனர். இன்று தேவார இன்னிசைச் செல்வர், தேவாரமணி திரு. இராசசேகரன் அவர்கள் இப் புண்ணிய தலத்தில் தேவார வகுப்புகளை ஆரம்பிக்கப்போகின்றனர். இப் பணி நாவலர் பெருமானுடைய ஆன்மாவுக்கு மிக்க பிரீதியை யளிககும''

சொற்கோவும் தோணிபுரத்தோன்றலும் சுந்தரரும் வாதவூர்த்தேசிகனும தோன்றித் தாஙகள் பாடியருளிய தேவாரத் திருவாசகத் திருமுறைகள்மூலம் உலகில் சைவசமயத்தைப் பாதுகாத்தனர். அவர்கள் தோன்றியிராவிட்டால் சிவபெருமானுடைய திருநீற்றினதும், ஐந்தெழுத்தினதும் வழக்கு உலகில் மறைந்திருக்கும்.

திருமுறைகள் சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மைபெற்ற பெரியோர்கள் வாக்குகளாகும். அவற்றைப் பக்தியுடன், இசையுடன் ஓதுகுன்றவர்கள் இமமைப் பயனையும், மறுமைப் பயனையும் அடைவார்கள், நாட்டில் தெய்வ நெறிவளரும். மக்கள் தருமவழியில் ஒழுகுவார்கள். பருவ மழைபெய்து நாட்டில் செலவம் பெருகும், நாட்டில் நீதியும் சமாதானமும் நிலவும்.

திரு. இராசசேகரன் அவர்களுடைய இவ்வரிய சைவத்தொண்டு நமது ஈழநாட்டில் நிகழும்படியான ஒழுங்குகளைப் புரிந்து வைத்த இலங்கை இந்து ஆலோசனைச் சபைக்கும், அவர் இங்கு இவ்வரிய தொண்டினைப் புரிய அவருக்கு விஸாவினை வழங்கிய நமது அரசாங்கத்துக்கும் சைவமக்கள் என்றும் நன்றியறிதலுள்ளவர்களாயிருத்தல் வேண்டும்.

# திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் குருபூசை

சைவ பரிபாலன சபையாதரவில் 10-6-71 வியாழக்கிழமை சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஷை குருபூசை நடைபெறும்.

முற் பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை சிவபூஜா மண்டபத்தில சிவபூசை, நாவலர் மண்டபத்தில் நடராசர்பூசை, நால்வர் பூசை புராணபடனம், பெரியபுராணம் திருஞா ன சம்பந்தமூர்த்தி நாயனூர் சோதியுற கலத்தல. மாகேசரபூசை.

# வேலணைமேற்கு, மகாகணபதிப் பிள்ளையார் இரதோற்சவம்

சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் தங்கள் இரு கண்கள் போல பேணிக்காத்து வாழுகின்ற மக்கள் வதியும் வேலணை மேற்கு, பெரியபுலத்தில் விநாயகப் பெருமான் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயம் மிகப்புராதனமானது. அவ்வூர்ச் சைவாபிமானிகள் பக்தியினுலும், ஊக்கத்தினுலும் கோவிற்றிருப்பணி கருங்கல்லினல் பெருஞ்செலவில் அழகாக பூர்த்தியாகியுள்ளது தொடர்ந்து சுற்று மதில், மண்டபங்கள், சண்டேசுவர நாயனுர் கோயிற்றிருப்பணிகளும் பூர்த்தியாயின. கோயிலுக்கு மணிக்கூட்டுக் கோபுரம், தேர்முட்டித் திருப்பணி அவசரம் தேவையாகும். ஷை ஆலயத்தின் இரதோற்சவம் 7-6—71 இல் வழமைபோல சிறப்பாக நடைபெறும். காலை 9 மணிக்கு விசேட அபிஷேகமும்; 11 மணிக்கு வசந்த மண்டப பூசையும், 12 மணியளவில் சுவாமி தேரில் ஆரோகணித்தலும் நிகழ விநாயகப்பெருமான் அடியார்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்,

## ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமாகுருபர சுவாமிகள் குருபூசைத் திருநாள்

கந்தர் கலிவெண்பா, நீதிநெறி விளக்கம், பிள்ளைத் தமிழ் முதலிய திவ்விய பிரபந்தங்களைப் பாடியருளி சைவநெறிகாத்த ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் குருபூசை 11-6-71 வெள்ளிக்கிழமை திருப்பனந்தாள் காசிமடத்தில் சிறப்பாக நடைபெறும். ஷை மடத்தின் சார்பில் 11-6-71 காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை மதுரை மீனாட்சியம்மன் கோவில் பொற்றாமரை கரையிலும், இரவு 8 மணி முதல் மறுநாட் காலை 6 மணி வரை மதுரை ஆவணி மூலவீதிகளிலும் தேவார அகண்ட பாராயணம் நடைபெறும்.

## 'சந்தக்கவிமணி' 'செந்தமிழ்ப்புலவர்'

# திரு சி. சின்னையா அவர்கள்

தென்மராட்சி சாவகச்சேரியைச் சேர்ந்த கச்சாயூர் செந்தமிழ்ப் புலவர் திரு. சி. சின்னையா அவர்கள் 28-5—71ல் தமது 76 ஆவது வயதில் சிவபதமெய்தினுர் கதிரை முருகன் மேல் ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களையும் மற்றும் பலவிடயங்களில் எண்ணிலடங்காப் பாடல்களையும் இவர் பாடியுள்ளார். கதிர்காம யாத்திரைப் பாராயண பிரபந்தம், அநுபந்தம் எங்கள் கதிர்காமம், திருமலை யாத்திரை, கதிரைமலைக் கோவை, தமிழ் மொழியாராய்ச்சி இலக்கியம் ஆகியன நூல்வடிவில் வெளிவந்த இவரின் படைப்புக்கள் ஆகும். இவரின் கதிரைமலைக் கோவை என்ற நூலுக்கு இலங்கைச் சாகித்திய மண்டலம் ஆயிரம் ரூபா பரிசளித்துக் கௌரவித்தது.

கோடிகாமம் திருநாவுக்கரசு மடாலய சபை, தென்மராட்சி சைவமகாசபை பக்தி நெறிக் கழகம், மகாஜன சபை, தென்மராட்சி முத்தமிழ் மன்றம் போன்ற ஸ்தாபனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு ஒரு சிறந்த சமயத் தொண்டராகவும், சமூக சேவையாளராகவும் இவர் பணிபுரிந்தார்.

ஈழத்தில் சைவத்தையும், தமிழையும் தனதிரு விழிபோல மதித்து தமது முழு வாழ்வையும் சைவத்துக்கும் தமிழுக்கும் அர்ப்பணித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் கல்விப் பரம்பரையில் புலவர் அவர்கள் கல்வி கற்றர்.

காலஞ்சென்ற மீசாலை வித்துவான் ஏகாம்பரத்தாரிடம் கல்வி கற்றுக் கந்தபுராண விரிவுரையை ஒழுங்காகக் கற்றவர். புல்வர் அவர்கள் தென்மராட்சியிற் பல கோவில்களில் புராணபடனம் செய்து வந்தார். வருடம்தோறும் திருவெம்பாவை நடைபஜனையையும் தானே முன்னின்று நடத்தி வந்தார்.

இவருடைய பாடல்கள் சந்த இன்பம் மிக்கவை. அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்களை நிகர்ப்பவை என்பதைப் பாராட்டிப் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்கள் இவருக்குச் "சந்தக்கவிமணி" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்கள். கட்டளைக் கலித்துறை என்ற இனப் பாடல்களைப் பாடுவதில் ஈழத்திலும் சரி, தமிழகத்திலும் சரி இவருக்கு இணை இவரே. மெய்யெழுத்து இல்லாமலே கட்டளைக கலித்துறையைப் பாடக் கூடிய வன்மையுடையவர். இவருடைய இத் தனிச் சிறப்பைப் பாராட்டிக் கொடிகாமம் தேன்தமிழ் மன்றத்தார் "கலித்துறை அரசு" என்னும் பட்டத்தையும் வழங்கினூர்கள்.

பூவினினிய நறுமணமும் அருவியின் ஒழுக்கும்போல ஓசையின்பம் மிக்க பாடல்களைப் பாடும் புலவர் அவர்கள் அண்மையில் ''குடும்ப வாழ்வில் அத்துவிதம் என்னும் அரிய நூலொன்றையும் வெளியிட்டுள்ளார். இந்நூலைத் தமிழ் கூறும் நல்லுலகம் முழுமையாக அறிந்து பயனடையுமுன்னே புலவரையா அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்.

கதிரை முருகனின் திருவருள் பெற்ற சந்தக் கவிமணி அவர்களின் ஆத்மா சாந்தி அடைவதாதுக.

இப் பெரியார் எங்கள் பத்திரிகைக்குச் செய்யுள் முறையிலும் வசன நடையிலும் அரிய விஷய தானங்கள் செய்துள்ளனர்.

புலவர் அவர்களின் அருமை மனைவியார் அவரின் இருபுத்திரர்கள் அருமை மகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கும் தமிழ் கூறும் நல்லுலகத்தாரின் அனுதாபம் உரியதாகுக.

## கைகண்ட மூலிகை

அறுகம்புல்லை நன்ருக அரைத்து தினமும் காலையில் தலையில் தேய்த்துக் குளிக்கவும். அறுகம்புல்லை நெல்லிக்காய் அளவு அரைத்து எடுத்து பசும்பாலில் கலந்து வடிகட்டி காலை மாலை உட்கொண்டால் கண்வலி நீங்கும். அன்று புளி காரம் நீக்கவும். மோர்ச்சாதம் சாப்பிடவும் குணம் காணலாம் என்று மயிலை தமிழ் சித்தவைத்திய மறுமலர்ச்சி மன்றம் தெரிவித்துள்ளது.

## சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகராலயம்

மேற்படி ஆலய பரிபாலன சபையினது 1-1-70 — 31-12-70 ஆண்டறிக்கை வரப்பெற்றேம். நிருவாக சபை அங்கத்தவர்கள்: தலைவர்: திரு. பாலசுப்பிரமணியம், காரியதரிசி: திரு பூ. கதிரவேலு, உதவிக் காரியதரிசி: விஜயசுந்தரம், மற்றைய அங்கத்தினர்கள்: திருவாளர்கள்: ஐ நடாராசா, ச. தங்கத்துரை, க மா வாசகர், க. சண்முகசுந்தரம், ப. வேலுப்பிள்ளை, ம. தம்பையா, மு. குலசேகரம், அ. பத்மநாதன், க. வ வேலாயுதம், அ. வேலுப்பிள்ளை, க ஆ. இரங்கநாதன், ஆ. மு. சண்முகம், கணக்குப் பரிசோதகர்கள்: திரு. S நடராசா, திரு S. வியாகேக, சிவஸ்ரீ பொ. ஞானேசுவரக் குருக்கள் பூசகராகக் கடமையாற்றி வருகின்றனர். சிங்கப்பூரிலுள்ள சைவ மக்களது சமயபற்றைப் பாராட்டுகின்றேம். கூட்டுப்பிரார்த்தனை, சமயவிரிவுரைகள், இசைக் கச்சேரிகள், சமய பாட வகுப்புக்களையும் கோவில் பரிபாலனசபையார் நடத்தி வருகின்றர்.

## சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம

ஷை சங்கத்தின் 52 ஆவது ஆண்டுக் கூட்டம், சங்கத்தின் காரியலாயத்தில் 4-4-71 இல் நடைபெற்றது. ஆண்டறிக்கையும் வரவு செலவுக் கணக்குப் படித்துப் அங்கீகரிக்கப்பெற்றபின் உத்தியோகத்தர் நியமனம் நடைபெற்றது. தலைவர்: திரு S. M. வாசகர்; உப தலைவர்: திரு. P. வேலுப்பிள்ளை, பொதுக் காரியதரிசி; திரு. A. தவரசாசா; உதவிக் காரியதர்சி: K சண்முகசுந்தரம்; தனுதிகாரி: திரு. A. மார்க்கண்டு, உதவித் தனுதிகாரி; திரு. K. T. அரசு; கலைப் பகுதிக் காரியதரிசி: திரு. A. வேலுப்பிள்ளை, விளையாட்டுப் பகுதிக் காரியதரிசி: திரு. N. N. சுந்தரம், நிருவாக சபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: S சிவக்கொழுந்து, V. N. சபாபதி, A. சூரியகுமாரன், K. கிருஷ்ணபிள்ளை, R. சிவசுப்பிரமணியம், A. பத்மநாதன், S. தங்கத்துரை

## நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவு அற்ற களஞ்சியம்.

# அவனன்றி யோரணுவுமசையாது

[திரு. சோ. க. வேலாயுதர், கொழும்பு.]

அறிவு நலம் வாய்க்கப் பெற்ற காலத்தே மனிதன் இந்த உலகத்தை உற்று நோக்கினுன். இந்த மண்ணிலே உயிர்கள் தோற்றி நிலைநின்று அழிவதைக் கண்டான். அவை தாமாகத் தோற்றி நின்று அழியமுடியுமா எனசிந்தனை செய்தான். அந்தச் சிந்தனை, உலகுயிர்களை ஆக்கி நிலை நிறுத்தியழிக்கின்ற ஒரு பெரிய சக்தியுண்டு என்ற முற்ற முடிந்த ஒரு பேருண்மையைக் கண்டுபிடிக்கச் செய்தது.

அந்தப் பேராற்றலும், வல்லமையுமுள்ள பொருளை கடவுள் - அதாவது உள்ளத்தைக் கடந்தது - என்றுகூறினுன். என்வேதான் எச்சமயமும் கடவுளை வலியுறுத்தி நிற்கின்றன என்பதை நாம் காணலாம். இந்த உண்மையை நமது சமயம் எவ்வாறு கூறுகின்றது என்பதனைக் காண்போம்.

"அவன் அவள் அதுவெனும்
அவை மூவினைமையின்
தோற்றிய திதியே
ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனுர்
புலவர்"

என்கின்றது சிவஞான போதம். இதனையே,

"ஒருவனொருத்தி யொன்றென்
றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று
போவது மாதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும்
தான் முதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த
சித்திரு மன்னி நின்றே"

என்று விளக்குகின்றது சிவஞானசித்தியார். இறைவன் என்ற ஒரு பொருள் இல்லாமலில்லை என்பதே இதன் கருத்து.

இன்றைய உலகிலே உலோகாயதம் மேலோங்கி நிற்கின்றது. இறையுணர்வு குன்றி வருகின்றது. அறிவு வளர்ந்த காலம் தொட்டு மனிதன் தன்னிலும் மேலான சக்தி ஒன்று உண்டு என்று உணர்ந்த உணர்வினை மறக்கப் பார்க்கிருன் சிறுபொழுது பெறும் இன்பத்திற்காக பெரும பேரின்பத்தினை இழக்க முனைகின்றுன்.

இறைவன அருளின்றி எவ்வுயிரும் இயங்காதென்பதை "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்று உரைத்தனர் மூதாதையர். அவனது ஆணையின வழியே உலகம் நடக்கின்றது

ஒரு நாமம் ஒருருவம் இல்லானுக்கு பல நாமங்களும பலவுருவங்களும் கற்பித்தனர் மாந்தர். ஒவ்வொரு சமயவழி காட்டியும் தன் அகக்காட்சியிற் கண்டதை நாம ரூபமாகப் படைத்து எமக்கு வழிகாட்டினர். ரூபம், அருபம் அற்றவனுக்கு உருவத்தை ஆக்கினர். எங்கும் நிறைந்து நிற்கின்ற பரம்பொருளை வழிபட ஆலயங்களை எழுப்பினர். ஆன்மாக்கள் லயித்தற்பொருட்டு ஆக்கப்பட்ட ஆலயங்கள் ஆண்டவனின் அளவின்றிறத்தை எடுத்துக் காட்டுவதற்காக வானுற ஓங்கி உயர்ந்தனவாக அமைக்கப்பட்டன அவை விசாலமானவையாக - அதாவது ஒரு நகரம் போலவே ஊர் மத்தியில் அமைக்கப்பட்டன, என்பதனையே "முக்கட்செல்வர் நகர் வலஞ் செயற்கே" என்ற புறநானூற்று அடிகள் எடுத்துக் காட்டுகின்றது நகர் என்ற சொல் நோக்கற்பாலது.

இத்தகைய பெருங்கோயில்களைக் கட்டி வாழ்வும சமயமும் பின்னிப் பிணைந்த தூயநெறியினில் வாழ்ந்தனர் எம்மூன்னோர். இதனையே இற்றை ஞான்று எம்மனோர் தெள்ளிதின் உணர்ந்து கடைப் பிடிக்கும் கடப்பாடுடையராதல் வேண்டும். வாழ்வு வேறு சமயம் வேறு என்று வாழும் நாம் எம் முன்னோர் காட்டியவழியைக் கடைப்பிடித்து இறைவனடியை அடி இடையறாது சிந்தித்து வந்தித்து வாழ்ந்து உய்யுநெறி எய்துவோமாக.

"சைவ சமயமே சமயம்
சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள்
வெளிகாட்டும்
இந்தக் கருத்தை விட்டுப்
பொய் வந்துழலும் சமயநெறிப்
புகுதவேண்டாம் முத்திதரும்
தெய்வச் சபையைக்
காண்பதற்குச்
சேரவாரும் செகத்திரே"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு. இல: M B 11296

காரைநகர் கிழக்கு க. சின்னத்தம்பி ஆறுமுகம் —வழக்காளி

எதிராக

காரைநகர் கிழக்கு, களபூமி காண்கோவிலடி 1. கந்தசாமி கைம்பெண் பார்வதி 2. கந்தசாமி தட்சணாமூர்த்தி

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11296-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணியை 1971-ம்ஆ ஆனிமீ 20-ம்உ (20-6-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2668/-ம் 4-12-69 தொடக்கம் 16-5-70 வரைக்கும் ரூபா 1500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய 401-87

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைநகர்கோவிற்பற்று காரைநகர் கிழக்கிறை 'கனகராயன்தோட்டம்' நிலப்பரப்பு 5 கொட்டைகள், வடலிகளும், வேப்ப மரங்களும், இதற் கெல்லை கிழக்கு அம்பலவாணர் பெண் பொன்னுப்பிள்ளைக்குரிய ஆதனம், வடக்கும், மேற்கும், தெற்கும் ஒழுங்கை.

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
46, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

M, 85 4—6—71

---

நேயர்கள் நெஞ்சம்

## "நீச்சல தடாகம்"

### சரித்திரப் பிரசித்தி பெற்ற சின்னக் கீரிமலையையே ஆக்கித் தாருங்கள்!

யாழ் மாநரசபை எல்லைக்குள் ஒரு நீச்சல் தடாகம் அமைக்கப்படவேண்டிய அவசியம் குறித்து பல ஆண்டுகளாக மக்கள் மத்தியில் பேச்சடிபட்டுவருகிறது இது செயற்படுந்நாள் எந்நாளோ? என்றுகூறுவாருமுளர்; இது இவ்வாறிருக்க, இப்போது நீச்சல்தடாகம் ஒன்றைப்பொருத்தமான இடத்தில் மாநர எல்லைக்குள் அமைப்பதுபற்றிய ஆலோசனைகள் இருப்பதாக அறிகிறோம். இதுவிடயத்தில் மாநகர சபையில் அங்கம் வகிப்போர் அவசரப்பட்டோ, கட்சி கட்டியோ, ஒருபாற்கோடியோ, முடிவுக்கு வருதல் நீதியல்ல. சில உறுப்பினர்கள் தமது வட்டாரத்துள் இருக்கும குளங்களைத் திருத்தஞ்செய்ய வாய்ப்பேற்பட்டுள்ளதாகப் பேசிக்கொள்வதாகப் பேச்சடிபடுகிறது, இந்நிலையில் எது நடக்குமோ என்ற கவலை மக்களிடம் நிலவுகிறது. சபைஉறுப்பினர்கள் விருப்பு வெறுப்பின்றி தீரஆலோசித்து, பொது மக்களின் நன்மையைக்கருதி மக்களின் அபிலாஷையைப் பூர்த்திசெய்யத்தக்க விதமாக நல்ல முடிபுக்கு வருவது வரவேற்கத் தக்கதாகும். நீச்சல் தடாகமாக உபயோகிக்கத்தக்க சிறந்த குளங்கள் பல நகரஎல்லைக்குள் விளங்குகின்றன. அவைகளுள் ஒன்றையோ இரண்டையோ உடனடியாகத்திருத்துதல் விரும்பத்தக்கதாகும். இன்றும் பல வேறு வட்டார மக்களாலும் விரும்பி நீச்சல் தடாகமாக உபயோகிக்கப்பட்டுவரும் ஓர் தலை சிறந்த தடாகம் நல்லூருக்கு அண்மையிலே நாயன்மார்கட்டு எனும் பதியினிலே உள்ளது. இக் குளம் நாயன்மார்கட்டுக் குளம் என வழங்கப்படுகிறது. அக் காலத் தமிழரசரால் வெட்டுவித்துப் பேணப்பட்டது, சிறந்தபோக்குவரத்து வசதிகளையும் நல்ல அமைதியான சூழலையுங்கொண்டது. இக் குளம் இருக்கும் வட்டாரம் யாழ்.மாநகரசபையில் 'நாயன்மார்கட்டு 7-ஆம் வட்டாரம்' என்னும் நாமத்துடன் அண்மைக்காலம்வரை இலங்கி வந்தது. இக் குளம் நோக்கி வரும பாரியவீதிக்கு 'நாயன்மார்வீதி' என்றபெயர் வழங்குகிறது. இப்போது வட்டாரப் பிரிப்பினுல் 'கலைமகள்' வட்டாரம் என்றநாமத்துடன் விளங்குகிறது ஏறத்தாழ நூறுபரப்பு விசாலங்கொண்டதும், எக்காலமும் தூய நீர் நிறைந்ததும் "சின்னக் கீரிமலை" எனப் பல்லோராலும என்றும் புகழப்படுவதுமான 'நாயன்மார்குளம்' சிறப்பான நீச்சற் றடாகமாக ஆக்கப்படவேண்டுமென்பதும்- சரித்திரப் பெருமை வாய்ந்த இவ் வட்டாரத்துக்கு (உடன்) மீண்டும் "நாயன்மார்கட்டு" வட்டாரம் என்ற நற்பெயர் சூட்டப் பெறல் வேண்டும் என்பதும் பல சான்றோர்களது தூய கருத்தாகும். இவ் வட்டார அங்கத்தவர். அபிமானிகள், அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து ஆவன புரிவார்களாக.

கா. இரகுநாதன்
நாயன்மார்கட்டு, 24-5-71.

---

## நல்லூர் — சந்நிதி பஜனைப் பாதயாத்திரை

வைகாசி விசாகத் திருநாளை முன்னிட்டு ஆண்டு தோறும் நிகழும் மேற்படி பசனைப் பாதயாத்திரை எதிர்வரும் 7-6-71 அதிகாலை 6 மணிக்கு நல்லூர் முருகப்பெருமான் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதிவழியாக செல்வச்சந்நிதி முருகப் பெருமான் ஆலயத்தைச் சென்றடையும். நல்லூர் பஜனைச் சபையும் அடியார் பலரும் சேர்ந்து நடாத்தும் இப் பாதயாத்திரை பல தலங்களில் தங்கிச் செல்லும். (ந. வி.)

---

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் கரம்பன், ஊர்காவற்றுறையில் அடைவு பிடிக்கும் திருமதி சிவகலை கனகரேத்தினம் அவர்களின் அடைவு கடையில் 1968-ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1969-ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ம் திகதி வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1971-ம் ஆண்டு ஆடி மாதம பத்தாம் திகதி (10—7—71) சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்

1971-ம் ஞூ வைகாசிமீ 31-ம் திகதி.

வை. ஏரம்பமூர்த்தி
கொமிசனரும்
விலைமதிப்பாளரும். ஏல விற்பனையாளரும்,

எம். 80 4, 11-6-71

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. M B 8949

வலந்தலை, காரைநகர் வடக்கு,
விநாசித்தம்பி முருகேசு பரமநாதன் —வழக்காளி

எதிராக

அரசடி வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்
1. வேலு காசிப்பிள்ளை 2. பெண் இராசம்மா

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 8949ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1971-ம் ஆ ஆடிமாதம் 5ஆம் திகதி (5-7-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4525/-ம், 19—3—67 தொடக்கம் 8 8—67 வரைக்கும் ரூபாய் 2500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 269-75

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "கோவில் வயல் அல்லது அம்மன் கோவில் வயல்" நி. பர 4 குழி 14 இதின் நடுப்புறமாக பிரிக்கப்பட்ட நி. பர. 1 குழி 10, 2/3 இந்த நில பர. 1 குழி 10 2/3ம், வீடும், பயிர்வகைகளும் இந்தக் காணியின் வடக்குப் பக்கமாக இருக்கும் கிணற்றில் பங்கும். கிழக்கெல்லை ஒரமாகவுள்ள வழி வாய்க்காலும் இதற்கெல்லை கிழக்கு தண்ணீர் வாய்க்கால், வடக்கு சின்னத்தம்பி செல்லையா பெண் இரத்தினத்தின் ஆதனம் மேற்கு ஒழுங்கை, தெற்கு சின்னத்துரை பெண் சின்னக்கிளியின் ஆதனம்.

பதிவு இல: D. 271/256

2. ஷை வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "கோவில்வயல் அல்லது அம்மன் கோவில் வயல்" நில பர. 1 குழி 16 எல்லை கிழக்கு கோவிலுக்குரிய ஆதனமும், சின்னத்தமபி சுப்பிரமணியத்தின் ஆதனமும், மேற்சொல்லிய முதலாம் ஆதனமும், வடக்கு இளையவன் சின்னத்தம்பிக்கும் பெண் ஆச்சிமுத்துவுக்குமுரிய ஆதனம். மேற்கு இராமுப்பிள்ளை திருஞானசம்பந்தருக்கும் மதுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு றோட்டு, இந்தக் குறித்த ஆதனம் பிரிவிடுதல் செய்யக்கூடாது ஆனல் ஒழுங்கை பாகம் வாங்க வேண்டும்

பதிவு இல: D 273/6

46, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்
எம. 86 4-6

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 10950

V, மயில்வாகனம் தம்பு
கரம்பன், —வழக்காளி

எதிராக

கணபதியார் தம்பு
சரவணை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10950ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1971ம் ஞூ ஆனி மாதம் 28-ந் திகதி (28—6—71) திங்கட் கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2000/-ம், 11-7-69 தொடக்கம் ரூபா 2000/-க்கும், முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 342-15

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை பாம்பன்கலடு நிலப் பரப்பு 18ம் கிணறும் கடைக் கட்டிடங்களும் தென்னைகளும், செய்பயிர் வான்பயிர்களும் இதற் கெல்லை கிழக்கு றோட்டு. வடக்கு தத்தோவிக்க மிசனுக்குரிய ஆதனம், மேற்கு எதிரிக்குரிய ஆதனம். தெற்கு வைத்தியான் பெண் மரியைக்கும் கறுவல் சித்தனுக்கும் உரிய ஆதனங்கள். பதிவு இலக்கம் C, 252/255

மு. நவரத்தினராசா
கொமிசனர் & விலை மதிப்பாளர்.
"கமலபதி"
ஆஸ்பத்திரி வீதி,
மண்டைதீவு,
26—5—71

எம், 83 4-6

---

## திருக்கேதீச்சர ஆலய பாலஸ்தாபனம்

திருக்கேதீச்சராலயத் திருப்பணிச் சபையின் முயற்சியினுல் கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமான் கோவில் பாலஸ்தாபனம் 6—6—71 ஞாயிற்றுக்கிழமை காலை 8-45 மணிககு நடைபெறத் திருவருள்பாலித்திருக்கிறது. இலங்கையிலுள்ள ஒவ்வொரு சைவப் பெருமக்களும் தம்மாலியன்ற பொருளுதவியையும் சரீரவுதவியையும் புரிய முன் வருதல் வேண்டும். இககருங்கற்றிருப்பணி இனிது பூர்த்தியாகக் கேதீச்சரப் பெருமான் திருவருள்புரிவாராக.

## ஸ்ரீ நொச்சியம்பதிப் பிள்ளையார்கோயில் வழிபடுவோர்சபை

அராலிமேற்கு, கோட்டைக்காடு ஸ்ரீ நொச்சியம்பதிப்பிள்ளையார்கோவில் வழிபடுவோர் சங்கததின் 16-ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் மேற்படி கோவில் முன்றிலில் எதிர்வரும் 8-6-71 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நிகழவிருக்கிறது. ந. நி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வழக்கு இலக்கம்: M B 3633

சிறுப்பிட்டி ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் பதிவு இல: J. 1234 அதன் பிரதிநிதிகள்

(1) தலைவர் வல்லிபுரம் மாணிககம்

(2) காரியதரிசி ஆறுமுகம் பொன்னையா, சிறுப்பிட்டி —வழக்காளிகள்

எதிராக

(இறந்தவர்) (1) தம்பிமுத்து வேலுப்பிள்ளை

(2) பெண் செல்லம் இருவரும், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைககட்டுவன்.

- எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B, 3633-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஹு ஆடி மாதம் 21-ம் உ (21-7-71) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1842/-ம், 21-9-60 தொடக்கம் 12-12-1960 வரைக்கும் ரூபாய் 1535/-க்கு 4 வீத வட்டியும் அதன்பின் முழுததொகைக்கும் இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 191 சதம் 70ம், இத்துடன் இருமுறை வெலியாத்தை புதுப்பிக்க ஏற்பட்ட முத்திரைச்செலவு ரூபாய் 12/-ம். 25-4-71ல் வெந்தீஸ் கொடுக்கப்பட்ட ரூபா 135 சதம் 50 சதம் இந்த கூட்டிய மொத்தத் தொகையில் ரூபா 200/- போக மிகுதி

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்பபாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டி இறை 'கொட்டைக் காடு' செற்பரப்பு 19 எல்லை கிழக்கு கார்த்திகேசர் வேலுப்பிள்ளையினுதனம், வடக்கு சங்கரப்பிள்ளை பெண் கதிராசிப்பிள்ளையினுதனம், மேற்கு சின்னத்தம்பி தாமருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சின்னத்தம்பி தாமருககும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலும்,

107, பெரியதெரு, யாழ்ப்பாணம், 3—6—71

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 84 4-6-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில

வழ. இல: M B 11446

தெல்லிப்பளை தெனமேற்கு, வேலுப்பிள்ளை கந்தையா —வழக்காளி

எதிராக

அளவெட்டி. கனகர் முத்தையா கைம்பெண் நேசமலர் கனகர் முத்தையாவின் ஆதன சட்டப்படி பிரதிநிதி - எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11446ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும ஒருதுண்டுக்காணியை 1971ம் ஆண்டு யூலை (ஆடி)மீ 14ம் உ (14-7-71) புதன்கிழமை முற்பகல் 9-30 மணிதொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை: ரூபாய் 4302-50 இன்னும் ரூபாய் 2500/-க்கு 7-2-1970 ஆண்டு தொடக்கம் 20-6-70 வரை 10% வட்டியும் கூடிய தொகைக்கு இறுபடும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 468-46

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணப் பிரிவு வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று தெல்லிப்பளைக் கிழக்கிறை பதிபாவயல் நெ, பா. பதினேழும், குளி ஒன்றும். (நெ பர 17 குளி 01) இதில் வடக்குப் பக்கமாக தண்கொண்ட அளிக்கப்பட்ட குளி மூன்று (குளி 03) நீக்கி மிகுதியான நெ. பா, பதினாறும் குளி பத்தும் (நெ. பா. 16 குளி 10) இதன் தென் கிழக்குப் பக்கமாகவுள்ள முருகர் காசிநாதரின் உரிமைக்காரருக்குரிய காணிக்குள்ளிருக்கும் கிணற்றிலும் இதன் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றிலும் இதற்குரிய பங்கும் வழமையான வழி வாய்க்கால் பாவிப்புருத்தும் இந்த நெற் பரப்பு 16 குளி 10ம், எல்லை கிழக்கு சின்னையா மகள் செல்வமலரின் ஆதனம், வடக்கு பொன்னுத்துரை பெண் மீனாட்சிப்பிள்ளைக்குரிய ஆதனமும், இராமர்சங்க ஆதனமும் அரியநாயகம் பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனமும், கணபதி, செல்லப்பா கைலாயபிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும், மேற்கு அரியநாயகம் பெண் வள்ளியம்மைக்கும் பொன்னுத்துரை பெண் செல்லம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு முத்தையா மகன் தாட்சாயணிக்கும் கனகர் பெண் சிவகாமணியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இவ்வெல்லைப்படி இது முழுவதும இதற்குரியவைகளும்,

பதிவு இலக்கம்: H. 352/207

வீரேசன் ரோட், கோண்டாவில். 25-5-71.


S. இரத்தினசபாபதி, J. P
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
எம். 82 4-6-71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், உ ம் கம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 4—6—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## நல்லிசையை வளர்க்கவேண்டும்



பக்தர்: "சைவத் திருக்கோவில்கள் ஒருசிலவற்றைத் தவிர பெரும்பாலானவை பக்தி நெறியை வளர்ப்பனவாயில்லை; இந்த நிலைக்கு சைவ மக்களே பொறுப்பாயிருக்கிறர்கள்; தமது திருவிழா உபயங்களுக்கு ஒலி பெருக்கிக் கருவிகளை உபயோகிக்கும்போது சைவ மக்களுட் பலர் எத்தகைய பாடல்களைப் பரப்ப முன்வருகிறர்கள்? நாதஸ்வர வித்துவான்களிடம் எத்தகைய இசையை வாசிக்கும்படி கேட்கின்றர்கள்? "மெல்லிசை வந்து – நல்லிசையை ஆழ்ந்தப் பார்க்கிறது!' சைவ மக்கள் யாவரும் தெய்வத்திருமுறைகளை போற்றவும், திருக்கோவில்களை அருள்நிலையங்களாக விளங்கச் செய்யவும் முன் வந்துழைக்க வேணும் அப்பிடீன்னு நல்லை. ஆதீனத்தில் நிகழ்ந்த சேக்கிழார் விழாவில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானவர்கள் கூறினருங்க".

சித்தர்: "மனம் போன போக்கெல்லாம்- போகவேண்டாம்" என்ற முதுரையை இக்காலத்தவர்களுட் பலர் சிந்திக்கிறர்களில்லையே! இது யார் மீதுள்ள குற்றம்? சைவ நெறியை வளர்க்கவேண்டிய பொறுப்பு யார் மீதுள்ளது? என்று தம்பிரான் சுவாமிகள் வற்புறுத்திக் கூறியிருக்கிறரேன்று சோல்லுங்க!"

"நாயன்மார் – நாதன்"

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 11247

காரைநகர் களபூமி

1. சுப்பிரமணியம் நடராசா

2. பெண் நேசமணி (முருகேசு பொன்னம்பலம் மகள்) — வழககாளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் நாவலர் ரோட்டு இல 305. 1 வயிரவப்பிள்ளை மணிக்கம் 2. பெண் பாக்கியம —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11247ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ஹு (ஜூன்) ஆனி மாதம் 21-ஆம் திகதி (21-6-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 15,625/-ம் இதில் ரூபா 10,000 க்கு 17-11-69 திகதி தொடக்கம் 9-6-70 திகதி வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 468-03 சதம். இதில் ரூபா 200/- இறுபட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குழிக் கோவிற்பற்று கரையூரிறை "மங்கை பாகன் வயல்" நிலப் பரப்பு ஒன்றும் குளி 12, 7/8 ம் கல்வீடும் குசினியும் கிணறும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு திருமதி கே. என், திசைவீரசிங்கியின் ஆதனம். வடக்கு கலிங்ரஸ் சந்தியாக்கோவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு ரோட்டு. தெற்கு வாய்க்கால் இதடங்கலும் இது கே அலோசெஸ் உத்தரவுபெற்ற உலாந்தாவால் 2-1-1947 ல் வரைந்த படத்தில் உள்ளது.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
தெல்லிப்பழை, 5-4-71
எம். 81 4-6-71,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்: M B 7001 D. C. J.

பரமசாமி ஐயர் சிவானந்த ஐயர், தெல்லிப்பளை தென்மேற்கு, —வழக்காளி

எதிராக

1. முருகர் ஆறுமுகம் 2. பெண் செல்லம்மா (இறந்துவிட்டார்) அவரின் உரித்தாளர் 1 T. தாமோதரம்பிள்ளை 2. பெண் புஸ்பவதி அளவெட்டி. —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7001ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுககாணி 1971-ம் ஆண்டு ஆனி மீ 14-ம் திகதி (14—6—71) திங்கட்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2662/-ம் 26-10-67 தொடககம் 8—6—67 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 326-25 ஏற்பட்ட செலவு ரூபாய் 241-30 முடிவான செலவு 49-75 நிகழவிருக்கும் செலவு 35-20 இதில் ரூபாய் 1500/- கழிக்கப்பட வேண்டியது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை 'சங்கனை' (Sanganai) நி பர. 10 கிணறும் எல்லை கிழககு வாய்க்கால். எல்லை வடக்கு அணை; எல்லை மேற்கு துரையப்பா கைம்பெண் அன்னம்மாவினுதனம், தெற்கு கதிர்காமர் முருகரின் ஆதனம். இந்தக் காணிககூடாகச் செல்லும் ரோட்டு புற நீங்கலாகவுள்ளது. இதடங்கலும்.

2. மேற்படி இறை "குருவளை" (Kuruvalai) நி. பர. 4½ வடலிகளும் எல்லை கிழக்கு சின்னரி அப்பாபிள்ளையினுதனம், எல்லை வடக்கு தர்பாபிள்ளை பெண் ஆச்சிமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், எல்லை மேற்கு சுந்தரம் பெண் செல்லத்திற்கும் வைரமுத்து சுப்பையா காசியர் வேலுப்பிள்ளைக்கும் வழிப்பாதைக்குமுரிய ஆதனங்கள, எல்லை தெற்கு கந்தசாமி பெண் நாகம்மாவிற்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

இந்திரபவனம், புங்குடுதீவு. 4-5-71

மா. முருகேசு J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 78 4—6—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: A. 890 D. C. J.

1. கந்தையா இராஜசிங்கம் 2. பெண் இராசமணி, ஏழாலை. —வழக்காளி

எதிராக

1. வல்லிபுரம் கதிரித்தம்பி கைம்பெண் இளையபிள்ளை வல்லிபுரம் கதிரித்தம்பி எஸ்ரேற் உரித்தாளர் தத்துவகாரர்) —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் A. 890-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971-ம் ஹு ஆனி மீ 10-ம் திகதி (10-6-71) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 957-25ம், 17-11-65 தொடக்கம் 19—2—70 வரைக்கும் ரூபாய் 500/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 376-80 ஏற்பட்ட செலவு ரூபாய் 248-58 சதம் முடிவான செலவு ரூபா 72-12 சதம் நிகழவிருக்கும் செலவு ரூபாய் 56-05 சதம்

### ஆதன விபரம

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவற்பற்று கட்டுவன் இறை "தம்பத்தப்புலம்" (Thambaththapulam) நி. பர. 14½ இயக்கப்புரம்" (Iyakkampuram) நி. பரப்பு 2, இரணடும் சேர்ந்த நி. பர. 16½ இதில வடகிழக்குப் பக்கத்திலிருக்கும் கிணற்றில் 1/3 பங்கும். வழிவாய்க்கால் உரித்தும், 1/3 பங்கு தண்ணீர் இறைக்கும் யந்திரமும் இராசதுரை பெண் சின்னத்தங்கத்துக்குரியது. எல்லை கிழக்கு இராசதுரை பெண் சின்னத்தங்கத்திற்கும் இலகுப்பிள்ளை இராசதுரைக்குமுரிய ஆதனம், வடக்கு வல்லிபுரம் நாகனுதருக்குரியவாதனம், மேற்கு யாக்கோப்பு பெண் முத்துக்குட்டியினுதனம். தெற்கு சின்னத்தம்பி கந்தவனத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். பதிவு இல: H 264/296

"இந்திர பவனம்" புங்குடுதீவு. 30-4-71

மா. முருகேசு J P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்.
எம் 79 4 6—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

மண்கும்பான் கந்தையா சோமசுந்தரம் —வழக்காளி

வழ. இல: M B 11142 எதிராக

1. மண்கும்பான் மேற்கு நாகேந்திரர் வேலாயுதபிள்ளை

2. பெண் தவமணியும் தற்சமயம் சரவணை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 11142-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுககாணியை 1971-ம் ஹு ஆனிமீ 29-ம் திகதி (29-6-71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 959/-ம், 29-9-69 தொடக்கம் 2—3—70 வரைக்கும் ரூபாய் 500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 278/-

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று சரவணை இறை "இத்திவின்றமயிலப்புலம்" நி பர. 6 (நிலப்பரப்பு ஆறு) வீடும், பனைகள்; வடலிகளும், செய்பயிர்களும் இதற்கெல்லை வடக்கும், கிழக்கும் சின்னத்தம்பி மயில்வாகனத்துக்குரிய ஆதனம். மேற்கு சங்கரப்பிள்ளை இராசையாவுக்குரிய ஆதனம், தெற்கு கந்தையா பெண் செல்லாச்சிக்கும் செல்லையா கணபதிக்குருக்களுக்குமுரிய ஆதனம், இதன் பதிவு யாழ்ப்பாணம். C. 306/194

46, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

இ. சு. தர்மரத்தினம்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
எம். 87 4—6—71